# ஊத்துக்குளி பேரூராட்சி – திருப்பூர் மாவட்டம்

## 2010-2011-ம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்

**ந.க. எண்: 106/2010** **நாள்:26.05.2010**

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்**

## குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (2-ம் அழைப்பு)

ஊத்துக்குளி பேரூராட்சியில் 2010-2011-ம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 02.06.2010-ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இப்பேரூராட்சி அலுவலகத்தில் 01.06.2010ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00மணி வரை உரிய தொகையினை ரொக்கமாக மட்டுமே செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் மற்றும் முன் வைப்புத் தொகையை 02.06.2010 அன்று மதியம் 12.00 மணிக்குள் செலுத்தி உரிய ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். மேலும், பணிகள் தொடர்பான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | ஷெட்யூல் படிவம் கிரயத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை ரூ. | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| அ | தார்சாலை அமைத்தல் | | | | |
| 1 | வார்டு எண்.2 ஊத்துக்குளி – திருப்பூர் விஜயமங்கலம் சாலை முதல் ஜெ.ஜெ.நகர் மற்றும் காவேரி நகர் வரை உள்ள மண் சாலையை தார்சாலையாக அமைத்தல். | 12.00 | 6,760/- | 24,000/- | 90 நாட்கள் |
| ஆ | சமுதாய நலக்கூடம் அமைத்தல் | | | | |
| 2 | ஊத்துக்குளி ஆர்.எஸ் – திருப்பூர் ரோடு பகுதியில் சமுதாயக்கூடம் கட்டுதல். | 15.00 | 6,760/- | 30,000/- | 120 நாட்கள் |
| இ | ஊரணி / குட்டை மேம்படுத்துதல் | | | | |
| 3 | வார்டு எண்.1 கொடியம்பாளையம் குட்டையை பலப்படுத்துதல். | 6.00 | 3,380/- | 12,000/- | 90 நாட்கள் |
| ஈ | சிமெண்ட் சாலை அமைத்தல். | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வார்டு எண்.2 பரப்புத்தோட்டம் ஆதிதிராவிடர் காலனி தொலைக்காட்சி பெட்டி அறை முதல் கிழக்கே செல்லும் மண் சாலையை கான்கிரீட் தளம் அமைத்தல். | 7.25 | 3,380/- | 14,500/- | 90 நாட்கள் |
| உ | கட்டுமானப்பணிகள் செய்தல் | | | | |
| 5 | வார்டு எண்.8 தெற்கு ராஜ வீதியில் சார்பதிவாளர் அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் நான்கு கடைகள் கட்டுதல். | 11.00 | 6,760/- | 22,000/- | 120 நாட்கள் |
| ஊ | சுடுகாடு / இடுகாடுகள் மேம்பாடு செய்தல் | | | | |
| 6 | கொடியம்பாளையம் ஊத்துக்குளி க.ச.எண்.1–ல் உள்ள மயானத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்தல். | 6.50 | 3,380/- | 13,000/- | 120 நாட்கள் |
| எ | அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளுதல் | | | | |
| 7 | வார்டு எண்.10 செரவேலம்பாளையம் தொலைக்காட்சி அறை முதல் ஊர் வரை மழைநீர் தடுப்புசுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | 3.00 | 1,690/- | 6,000/- | 90 நாட்கள் |
| 8 | வார்டு எண்.5 பஸ்நிறுத்தம் முதல் நேரு வீதி வழியாக சென்று மேற்கு வீதி இணையும் மண் சாலையை தார்சாலையாக மாற்றுதல். | 3.50 | 1,690/- | 7,000/- | 90 நாட்கள் |
| | மொத்தம் | 64.25 | | | |

## பொது நிபந்தனைகள்

1. டெண்டர் போட விரும்புவோர் கீழே கண்ட வேலைக்கு டெண்டர் டெபாசிட்டாக அதன் எதிரே குறிப்பிட்ட தொகைக்கு இவ்வலுவலகத்தில் ரொக்கமாக 01.06.2010– ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்குள் செலுத்திய இரசீதினை டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்ததாரர் பேரூராட்சியில் பதிவு பெற்று ஆண்டு தோறும் புதிப்பிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. செலுத்தப்படும் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது டேவணித் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ, செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
6. ஒப்பந்தாரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கிக்கொண்டால் டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும் அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
7. ஒப்பந்ததாரர் தமக்கு அளிக்கப்பட்ட பணியினை வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது.
8. ஒப்பந்தப்புள்ளிகளை மூடிமுத்திரையிட்ட உறைக்குள் வைத்து உறையின்மீது எந்த வேலைகுரிய ஒப்பந்தப்புள்ளி டெண்டர் தேதி நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் ஊத்துக்குளி பேரூராட்சி என்ற முகவரி இட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.

9. வேலை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.

10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 8–ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தாரரின் வைப்புத் தொகைகளையும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்

11. குறிப்பிட்ட தேதியில் வேலை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித்தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்படும். பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும்அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் நிராகரிக்கப்பட்ட பொருட்களை ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர்கள் சேகரித்திடல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்

13. யாருடைய டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

14. வேலை முடிந்த பின்னர் பட்டியலில் கீழ்க்கண்ட தொகையை கழித்துகொடுக்கப்பட்டு மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ.எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | வருமானமேல்வரி | 10% |
| 4 | கல்வி வரி | 3% |
| 5 | விற்பனை வரி | 2% |
| 6 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 7 | தார்கிரயம் | அங்கிகரிக்கப் பட்ட வேலைப் பட்டியலின்படி |
| 8 | சிமெண்ட் கிரயம் | |
| 9 | ரோலர் வாடகை | |
| 10 | கலவை இயந்திர வாடகை | |
| 11 | தண்ணீர் கட்டணம் | |
| 12 | தொழில் நுட்ப உதவியாளர் ஊதியம் | |

15. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டட டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் தரப்படும்.

16. பணிகளுக்கு ரோலர், கலவை இயந்திரங்களை சொந்த ஏற்பாட்டின் பேரில் பயன்படுத்தி உரிய காலத்திற்குள் வேலைகளை முடிக்க வேண்டும்.

17. டெண்டர் கோரும் நாளை, நிர்வாக நலன் கருதி, எக்காரணமும் காண்பிக்காமல், தள்ளி வைக்கவோ, அல்லது மறு டெண்டர் கோரவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

18. பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு டெண்டர் உறுதி செய்யப்படும்.

19. டெண்டர் அங்கீகாரிக்கப்பட்டு வேலை உத்திரவு பெற்ற ஒரு வார அவகாசத்திற்குள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
20. பணியினை உரிய காலக்கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், வேலையை உரிய காலத்திற்குள் தவறாமல் முடித்து இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும்.
21. அரசிடமிருந்து அவசர கால உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அவ்வுத்திரவின்படி விதிமுறைகள் செயல்படுத்தப்படும்.
22. இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.
23. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை ரூ.5.00 இலட்சத்திற்கும்மேற்பட்டபணிகளுக்கான http://townpanchayats.tn.gov.in என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும், ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்காக http://www.tn.gov.in என்ற தமிழக அரசு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
24. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.
25. e-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்

செயல் அலுவலர்,
ஊத்துக்குளி பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

**<u>பெறுநர்</u>**

ஊத்துக்குளி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

**<u>நகல்</u>**

1. அலுவலக விளம்பரப்பலகைக்கு,
2. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. பேரூராட்சி உதவி இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி செயற் பொறியாளர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகம் ஈரோடு -11
5. உதவிபொறியாளர், பேரூராட்சி தொகுதி, அவிநாசி.
6. செயல் அலுவலர், குன்னத்தூர், திருமுருகன்பூண்டி, அவினாசி ஆகிய பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய
7. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்குளி, அவினாசி, திருப்பூர் ஆகிய அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.